Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 290

சனிக்கிழமை
13 செப்ரெம்பர் 2025

ஆவணி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## ஜனநாயக சுட்டியில் இலங்கை முன்னேற்றம்!

கொழும்பு, செப். 13
சர்வதேச நாடுகளுக்கு இடையிலான ஜனநாயக நிலைத் தரப்படுத்தலில், இலங்கை கணிச மான அளவுக்கு

11



மஹிந்தவைத் தொடர்ந்து

## ரணிலையும் சந்தித்தார் சீனத் தூதுவர் ஷென்!



கொழும்பு, செப். 13
இலங்கைக்கான சீனத்தூதுவர் ஷென் ஹொங், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

11

# கற்கோவளம் மீனவர்களின் வாடிகள் அடித்து உடைப்பு

## மணல் மாபியாக்கள் வெறியாட்டம்; நீதிகோரி மீனவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 13
மணல் கடத்தலை மேற்கொள்ளும் மாபியாக்களால், கற்கோவள மீனவர்களின் வாடிகள் அடித்து உடைக்கப்பட்டதுடன், மீன்பிடி உபகரணங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலில் இரு மீனவர்கள் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

11

## பட்ஜெட் விவாதம் நவ. 8ஆம் திகதி

### பட்ஜெட் உரை நவம்பர் 7

கொழும்பு, செப். 13
2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் உரை நவம்பர் மாதம் 7ஆம் திகதி இடம்பெறும் என்றும், அதைத் தொடர்ந்து, பட்ஜெட் தொடர்பான விவாதங்களை நவம்பர் மாதம் 8ஆம் திகதி தொடக்கம்

10

## கைதுகளில் இருந்து எம்மைக் காத்தருள்க

### மகாநாயக்கர்களிடம் எதிர்க்கட்சிகள் ஓட்டம்

கொழும்பு, செப். 13
சட்டங்களை முறைகேடாகப் பயன்படுத்தி அரசாங்கம் தம்மைக் கைது செய்கின்றது என்றும், இந்த விடயத்தில் தம்மைப் பாதுகாக்குமாறும் எதிர்க்கட்சியினர் மகாநாயக்கர்களிடம் கோரிக்கை விடுத்துள்ள

10

## நான்கு நாள்களேயான பச்சிளம் சிசு இறப்பு!




யாழ்ப்பாணம், செப். 13
பிறந்து நான்கு நாள்களேயான பச்சிளம் சிசுவொன்று நேற்று உயிரிழந்துள்ளது. யாழ்ப்பாணம் நவாலிப் பகுதியைச் சேர்ந்த சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
வலிகாமம் கிழக்கு திர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார்.
உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

ஜி.பி.எஸ். செயலிழப்பால்

## இலங்கையின் கடற்பரப்புக்குள் வழிதவறிய இந்திய மீனவர்கள்!

### பாதுகாப்பாக ஒப்படைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 13
காரைநகர் கடற்பரப்பில் படகுடன் தத்தளித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் நால்வரையும், அவர்களின் படகுகளுடன் இந்திய எல்லையில் கொண்டுசென்று விடுவிக்குமாறு ஊர்காவற்றுறை

11

## போதைமாத்திரைகளுடன் இளைஞர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், செப். 13
யாழ்ப்பாணம் - கொழும்புத்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இளைஞர் ஒருவர் போதை மாத்திரைகளு

10

இந்தியாவில் இருந்து

## பறவைகள் கடத்தல்; கைதாகினர் இருவர்!

மன்னார், செப். 13
இந்தியாவில் இருந்து பறவைகளைக் கடத்திய குற்றச்சாட்டில், மன்னார் - சிறிதோப்புவ கடற்கரைக்கு அண்மித்த பகுதியில் வைத்து

10

பொன்னாலை

## வரதராஜப் பெருமாளுக்கு இன்று தேர்த்திருவிழா!

யாழ்ப்பாணம், செப். 13
வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயப் பெருவிழாவின் தேர் உற்சவம் இன்று சனிக்கிழமை இடம்பெற

09

## மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவீழ்ந்த பெண் உயிரிழப்பு

### தருமபுரத்தில் சோகம்

கிளிநொச்சி, டிசெ. 13
மோட்டார்சைக்கிளில் இருந்து வீழ்ந்த குடும்பப் பெண்ணொருவர் மேலதிக சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

10

## எமக்கு சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லை!

### முஜிபுர் எம்.பி. அதிருப்தி



கொழும்பு, செப். 13
சபாநாயகர் மீதான நம்பிக்கை குறைவடைந்துவருகின்றது. எனவே, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது தொடர்பில் விரைவில் முடிவெடுக்கப்படும் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 12.09.2025 | 4192 | W | 03 23 38 72 | விசேட எழுத்து W |
| ஹந்தஹமனை ராசி சுப பலன் | 12.09.2025 | 1259 | | 18 27 36 59 | வெற்றி இலக்கம் மேஷம் |
| NLB ஜய | 12.09.2025 | 0218 | O | 4 2 0 9 | |
| மெகா பவர் | 12.09.2025 | 2296 | Z | 07 46 67 78 | சுப்பர் இலக்கம் 20 |
| மஹஜன சம்பத | 12.09.2025 | 5950 | M | 9 6 5 2 6 6 | |
| தன நிதானய | 12.09.2025 | 1980 | P | 59 62 65 73 | விசேட எழுத்து P |
| அத சம்பத | 12.09.2025 | 0525 | E | 5 2 6 6 | |
| சுப தவசக் | 12.09.2025 | 0066 | | 08 13 41 44 | வெற்றி இலக்கம் சிம்மம் |

# சிறைகளில் மும்மடங்கில் கைதிகளின் எண்ணிக்கை

**கொழும்பு, செப்.13**
**நாட்டின் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 35 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப்பேச்சாளருமான ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

சிறைச்சாலைக் கைதிகளின் எண்ணிக்கை 12 ஆயிரமாக வரையறைப்படுத்தப்பட்டிருந்தாலும் தற்போது அதன் எண்ணிக்கை 3 மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் சிறைச்சாலைகளில் மிகப்பெரும் நெரிசல் நிலவுகின்றது. சிறைக்கைதி ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா செலவழிக்கப்படுகின்றது. பெரும்பாலான சிறைக்கைதிகள் போதைப் பொருள் குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டவர்க ளாவர். இவ்வாறு போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்படுபவர்களைச் சிறைச்சாலைகளில் தடுத்துவைப்பதற்குப் பதிலாகப் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கக்க வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்துள்ளார். (ச-இ)



## தேரருக்குப் பிணை

கொழும்பு, செப்.13
அத்துரலியே ரத்தன தேரரைப் பிணையில் விடுவிக்க நுகேகொடை மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.
தலா ஐந்து இலட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு தனிப்பட்ட பிணைகளி லும், 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டதுடன் வெளிநாட்டுப் பயணத் தடையும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.
2020 ஆம் ஆண்டு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறுவதற்கு, அபே ஜன பலக் கட்சியின் பொதுச்செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கடத்தி, அவரை அச்சுறுத்தியமை தொடர்பில் அத்துரலியே ரத்தன தேரர் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## அரச இல்லத்திலிருந்து விரைவில் வெளியேறுவேன்!

### சந்திரிகா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்.13
இரண்டு மாதங்களுக்குள் தனது அதிகாரபூர்வஅரச இல்லத்தை விட்டு வெளியேறவுள்ளேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொழும்பில் தான் குடியிருக்க தற்போது புதுப்பிக்கப்பட்டு வரும் ஒரு வீட்டை அடையாளம் கண்டுள்ளேன். விதிமுறைகளின்படி, அரசாங்க வீட்டில் வசிக்கும் எவரும் அந்த இடத்தைவிட்டு வெளியேறுவதற்கு முன் மூன்று மாத அறிவிப்பு வழங்கப்படவேண்டும். எனக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை.
ஓய்வுபெற்ற பிறகு எனது அதிகாரபூர்வ இல்லமாக ஒதுக்கப்பட்ட பிறகு, அதைப் புதுப்பித்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக ஏற்கனவே 14 மில்லியன் ரூபா செலுத்திவிட்டேன். எனக்கு கொழும்பில் வீடு இல்லை. என்னுடைய ஒரே வீடு ரோஸ்மீட் பிளேஸில் இருந்தது. நான் அதை விற்றுவிட்டேன். அந்தப் பணத்தில் நான் வாழ்கிறேன். நான் ஊழலில் ஈடுபடவில்லை - என்றார். (ச-இ)

| லொத்தர் | திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் / சீட்டிழுப்பு வாரம் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|---|
| சுபிரி தன சம்பத (DLB) | 12.09.2025 | வெள்ளிக்கிழமை | U | 2 7 8 8 0 9 | வெற்றி வாரம் 0658 | |
| Super Ball (DLB) | 12.09.2025 | வெள்ளிக்கிழமை | P | 09 38 43 54 | சீட்டிழுப்பு வாரம் 2924 | |
| சனிதா (DLB) | 12.09.2025 | வெள்ளிக்கிழமை | H | 03 07 58 73 | வெற்றி வாரம் 5085 | |
| SASIRI (DLB) | 12.09.2025 | வெள்ளிக்கிழமை | | 05 08 43 | வெற்றி வாரம் 0768 | |
| லக்ன ராசி (DLB) | 12.09.2025 | வெள்ளிக்கிழமை | | 02 05 45 47 | சீட்டிழுப்பு வாரம் 4636 | துலாம் |
| KAPRUKA (DLB) | 12.09.2025 | வெள்ளிக்கிழமை | J | 24 37 39 46 | வெற்றி வாரம் 2100 | சுப்பர் இலக்கம் 02 |
| அத கோடிபதி (DLB) | 12.09.2025 | வெள்ளிக்கிழமை | H | 21 23 36 51 | வெற்றி வாரம் 2750 | |

## சட்டச்சிக்கல் தீர்ந்தபின்னர் நிச்சயம் மாகாணத் தேர்தல்!

### சத்தியம் செய்கிறார் பொதுநிர்வாக அமைச்சர்

கொழும்பு, செப்.13
மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். ஆயினும் தேர்தல் திகதியைத் தற்போது குறிப்பிடமுடியாது என்று மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மக்கள் பிரதிநிதிகள் இன்றி மாகாணசபைகளைத் தொடர்ந்து நிர்வகிக்கும் நிலைப்பாட்டில் அரசாங்கம் இல்லை. பழைய தேர்தல்முறைமையில் தேர்தலை நடத்தமுடியாது, புதிய தேர்தல் முறைமையிலும் தேர்தலை நடத்துவதில் சிக்கல் காணப்படுகின்றது.
மாகாணசபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச்சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டியது அவசியம். சட்டச்சிக்கலுக்குத் தீர்வுகண்டபின்னர் தாமதமின்றி மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் - என்றார். (எ-இ)

## இரணைமடுக் குளத்தைப் பார்வையிட்ட ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர்

கிளிநொச்சி,செப்.13
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் அமைக்கப்பட்ட இரணைமடுக்குளம் மற்றும் இரணைமடுக் குள ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.
இந்தத் திட்டத்தின்மூலம் விவசாயிகள் பெறும் நன்மைகள் தொடர்பாகவும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.
வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ச.சிவஸ்ரீ, வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் பிரிவு எந்திரி என்.சுதாகரன், வடமாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி த.இராஜகோபு, கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.கருணாநிதி, கிளிநொச்சி கிழக்குப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் கே.பிரகாஸ் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள் மற்றும் இரணைமடுக்குள கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர், திருவையாறு ஏற்று நீர்ப்பாசன விவசாயிகளுடன் குழுவினர் சந்திப்பை மேற்கொண்டனர். (க-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 72 பேருக்கு எதிராக சிவப்பு அறிவித்தல்



*பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்*

**கொழும்பு, செப்.13**
**வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாளக் குழுக்களின் 72 உறுப்பினர்களைக் கைதுசெய்வதற்கு சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வில் சபை ஒத்திவைப்பு வேளையில் ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர்மேலும்தெரிவிக்கையில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் நாட்டைவிட்டு வெளியேறும் போதும், உள்நுழையும் போதும்கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள 556 பேரைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்களைக் கைதுசெய்வதற்கு இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, 72 பேருக்கு எதிராகச் சிவப்பு அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)



## பட்டப்பகலில் சங்கிலி அறுப்பு


யாழ்ப்பாணம், செப்.13
சாவகச்சேரி கப்பூது வீதியூடாகப் பயணித்த ஒருவரைத் தாக்கி அவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலி பட்டப்பகலில் கொள்ளையிடப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை நடந்துள்ளது. சாவகச்சேரியிலிருந்து கப்பூது வீதியால் வடமராட்சிப் பகுதிக்கு வந்து சென்றுகொண்டிருந்த ஆண் ஒருவரை மோட்டார் சைக்கிள் வந்த இருவர் வழிமறித்து கத்தியைக் காட்டி அச்சுறுத்தி சங்கிலியைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-100)

திட்டமிட்ட குற்றங்கள்

## நடப்பாண்டில் 105 பதிவு 322 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, செப்.13
இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் 10ஆம் திகதி வரை மொத்தம் 105 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் பதிவாகியுள்ளன. அந்தச் சம்பவங்கள் தொடர்பாக மொத்தம் 322 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.
கைதுசெய்யப்பட்டவர்களில் 33 துப்பாக்கிதாரிகளும், 24 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களும் மற்றும் குற்றத்துக்கு உதவினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட 265 சந்தேகநபர்களும் அடங்குவர்.
அத்துடன் இவ்வருடத்தில் இதுவரை மொத்தம் ஆயிரத்து 698 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இலஞ்சம் பெற்ற கான்ஸ்டபிள் கைது



கொழும்பு, செப்.13
போக்குவரத்துக் குற்றத்துக்காக வழக்குப் பதிவுசெய்யாமல் வருமான வரி அனுமதிப்பத்திரம் வழங்க 10ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு அதிகாரிகளால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## முன்னேற்ற பாதையில் இலங்கை



கொழும்பு, செப்.13
ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தனது பழைய நிலைமைக்கு வேகமாகத் திரும்பிவருகின்றது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.
உலக வங்கியின் உறுப்பு நாடுகளில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மதிப்பாய்வின்படி, அனைத்து இலங்கையர்களும் அரச நிதிச் செயற்பாடுகளை உரிய முறையில்செயற்படுத்தக்கூடியநிலையில் இலங்கை காணப்படுகின்றது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

## யாழ்.போதனாவில் 'ஓ' வகைக் குருதி தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செப்.13
யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் தற்போது 'ஓ' பாசிட்டிவ் குருதி வகைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
இந்தவகைக் குருதியை உடையவர்கள் மருத்துவமனை இரத்த வங்கிக்கு நேரடியாக வருகைதந்து குருதிக்கொடை வழங்கி உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ச-41-66)

## வெள்ளைக்கோட்டு கள்ளப்பேர்வழி

ஏமாத்துகள் பலவிதம், அதில இப்ப புதுவிதமா ஒரு சிலர் ஏமாத்த வெளிக்கிட்டிட்டினம். "கருப்பசாமி குத்தகைதாரர்" எண்டொரு படத்தில வடிவேலு தன்ர ஆக்களை காருக்குக் குறுக்க படுக்க வைச்சுப்போட்டு, அதை ஒரு அக்சிடெண்ட்மாதிரி சோடிச்சு வாகனக்காரரிட்ட காசு கறப்பார். அந்தப் படத்தை ஆரோ சிலர் வடிவாப் பாத்திட்டு அதேமாதிரி இஞ்சையும் காசு பாக்கலாம் எண்டு வெளிக்கிட்டிருக்கினம்போல. ஆனால் இஞ்சகாருக்குக் குறுக்க படுத்தால் மேலால ஏத்திக்கொண்டு போடுவினம் எண்டு வடிவாத் தெரிஞ்சதால வேற 'ரிக்ஸை' பாவிக்கினம்.

கனபேர் போய்வாற றோட்டில, பாதசாரியள் றோட்டைக் கடக்கிற வெள்ளைக்கோட்டுக்குக் கிட்டவா ஒருத்தர் நிப்பார். ஆளின்ர கையில ஒரு போனும், ரிசீற்றுகளும், போட்டோக்கொப்பிப் பேப்பர்களும் இருக்கும். அந்தக் கோட்டோட நிண்டுகொண்டு அதால மோட்டர் சைக்கிளில வாறவையைத் தூரத்திலேயே நோட்டமிடுவார். வயசான, வாயில்லாச் சீவன்கள் எண்டு சிலருக்கு முகத்தில ஒட்டியிருக்கும். அப்பிடியான ஆக்கள் அந்த வெள்ளைக் கோட்டடியில வரேக்க, சடாரெண்டு இவர் றோட்டைக் கடக்கப் போறமாதிரி கையை நீட்டுவார். அப்பிடிக் கைநீட்டேக்குள்ள, அவரின்ர கை அதால வாற அப்பாவியின்ர மோட்டர் சைக்கிள் ஹாண்டில தட்டுப்படுறமாதிரித்தான் 'ரைமிங்' இருக்கும். உடனேயே அவரின்ர கையில இருக்கிறபோனும், ரிசீற்றுகளும் அப்பிடியே பறந்து வெள்ளைக்கோட்டில விழ, அதை அப்பாவி மாதிரி அவர் பொறுக்குவார். அவரில பரிதாபப்படாமல், 'எங்களில பிழை இல்லை' எண்டு நினைச்சுக்கொண்டு போனீங்கள் எண்டால் பிரச்சினை இல்லை.

ஆனால், "ஐயோ பாவம், என்ர மோட்டர் சைக்கிளில தட்டுப்பட்டு இப்பிடியாகிட்டுதே" எண்டு நினைச்சு, ஒருக்கா பைக்கை நிப்பாட்டி , ஒரு அனுதாபப் பார்வை பாத்திட்டு போனாலோ, இல்லாட்டி இன்னும் இரக்கம் ஆறாகப் பெருகி அப்பிடியே பதைபதைச்சு பைக்கில இருந்து இறங்கிக்கீழ விழுந்ததுகளை நீங்களும் சேர்ந்து பொறுக்கிக் குடுத்தாலோ உங்களை ஏழரைச் சனியன் வந்து அப்பிடியே கவ்விப் பிடிச்சிடும். நிலைமையைப் பார்த்து அந்த இடத்துல வைச்சோ இல்லாட்டி உங்களைப் போகவிட்டிட்டு ஆக்கள் குறைஞ்ச இடத்தில வைச்சோ அந்தாள் 'கேமை'கேக்க வெளிக்கிடுவார். "உன்னால தான் என்ர போன் உடைஞ்சுபோட்டுது. மரியாதையா போன் காசைத் தா" எண்டு வெருட்டுவார். நீங்களும் வேறவழியில்லாமல் முழுக்காசும் குடுக்கேலாட்டியும் பொக்கற்றுக்க கிடக்கிறதைக் குடுத்திட்டு, அந்த இடத்தை விட்டு மாறினால் காணுமெண்டு ஓடுவியள். அவரும் அதை வாங்கிப்போட்டு, அடுத்த இரைக்காக அந்த வெள்ளைக்கோட்டடியில ஓடுமீன் ஓடி அப்பாவி மீன் வரும்வரைக்கும் காத்திருப்பார். இந்த வெள்ளைக்கோட்டு கள்ளப்பேர்வழி, ஒரே ஆளிட்ட ரண்டு தரம் இப்பிடி விளையாட்டுக் காட்ட வெளிக்கிடேக்கதான், இப்பிடியொரு ஏமாத்துவேலை நடக்குதெண்டு தெரியவந்திருக்கு. இனிமேல் றோட்டில போகேக்க உங்கட இரக்க குணத்தை கொஞ்சம் கழட்டி வைச்சுப்போட்டு போங்கோ. இல்லாட்டி இப்பிடியான வையிட்ட உள்ளதையெல்லாம் குடுக்கவேண்டி வந்திடும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்ப தைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயி லுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** சாதிக்கும்நாளாகஅமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள்.

**தனுசு:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# பொன்னாலை வரதராஜரின் தேர்த்திருவிழா காண வாரீர்





இ.உமணகேனன்
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம்*
*யாழ்.பல்கலைக்கழகம்*

ஈழமணித் திருநாட்டிலுள்ள வரலாற்றுப் பழமையும் திருவருட் சிறப்பும் வாய்ந்த விஷ்ணு தலமாக பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் ஆலயம் நிகழ்கின்றது. சைவ மக்களின் ஆலயங்களான திருக்கேதீஸ்ரம், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம், நகுலேஸ்வரம் முதலிய ஆலயங்களின் தோற்றம், பெருமை என்பன கூறப்பட்ட தட்சண கைலாச புராணத்தில் இவ்வாலயத்தின் தோற்றம், அருட்சிறப்பு என்பன இடம்பெற்றுள்ளமையானது இவ்வாலயத்தின் பழமைக்கும் பெருமைக்கும் தக்க சான்றாகும். சான்றுகளின் அடிப்படையில் இத்தலம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே புகழ் பெற்றிருந்தது எனக் கூறமுடியும். பொன்னாலை சுவர்ணாலயபுரி, சதுரங்கம் எனவும் அழைக்கப்படும். இந்திரன் வாழ்ந்தமையாலும், இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றியதாலும் சுவர்ணாலயபுரி என்ற பெயர் ஏற்பட்டதென்பர். சுவர்ணாலயத்தின் தமிழாக்கமே பொன்னாலயம். பொன் செல்வத்திற்கு இறைவியான மஹாலட்சுமி பூசித்து வழிபட்ட தலம் எனவும் போற்றப்படுகின்றது. மேலுமிங்கு நிலவிவரும் மரபுகளின்படி பழைய ஆலயம் 7வீதிகள் கொண்டிருந்ததெனவும் ஏழாவது வீதியிருந்த இடத்தில்தான் விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது எனவும் அறியப்படுகின்றது.

*"தேரிலே சுவாமியைத் தரிசிப்பவன் பிறவிப்பயனை அடைவான்"*

சைவசமய ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களில் மிகவும் கோலாகலமான விழா தேர்த்திருவிழாவாகும். ஆலயத்தில் நடைபெறும் விழா என்பதோடமையாது கிராமத்திலோ, நகரத்திலோ உள்ள சகல மக்களுக்கும் எழுச்சியையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும் விழாவாக தேர்த்திருவிழா விளங்குகின்றது. இறைவனைச் சூழவரும் தேவர்களுக்கும் மற்றும் மகாதேவர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும் இல்லமாக அமைவது திருக்கோயிலாகும். திருக்கோயிலுக்கு வெளியில் வசிக்கின்ற இறையடியார்களுக்கெல்லாம் அவன் அருளைத் தந்துதவ நிற்பது இத் திருத்தேராகும். அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கின்ற இறைவனும் அவனது சந்நிதியுமாகிய தேவியின் வசந்த மண்டபத்திலிருந்து புறப்பட்டு மூர்த்தியில் தமது ஒளிவடிவினைப் பொருத்திய வண்ணம் மலர்களாலும், மணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட பொற்தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவர். மூர்த்தியில் எழுந்தருளியிருக்கும் இறைவனைக் கண்டு தரிசித்து எல்லோரும் அவன் அருள்பெற்று உய்கின்றனர். திருத்தேர் வலம்வரும் ஒவ்வொருமுறையும் நாடு நகரமென்ன இந்த உலகமே அவனால் அருள்பாலிக்கப்பட்டு நற்கதி பெறுகின்றது. எல்லாருமே அருள் பெறுகின்றார்கள். திருத்தேரினை ஆக்கி அலங்கரித்து அது வலம்வரக்காரணமாயிருந்த அனைவரையும் இறைவன் வலியவந்து ஆட்கொள்கிறார். தேர்த்திருவிழாவின்போது தீமைகள், அதர்மங்கள் அழிக்கப்படுகின்றன. ஆத்துமம் அழிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக ஆத்துமம் ஈடேற்றப்பட்ட உண்மையினைப் பல வரலாறுகள் கூறுகின்றன. மேலும் தேரை அசைப்பதற்கு பலர் ஒற்றுமையுடன் செயற்படவேண்டியிருப்பதால் பலரின் ஒற்றுமைச்சின்னமாகவும் தேர்த்திருவிழா விளங்குகின்றது என்று சொல்வர்.

இத்தகைய சிறப்புமிக்க தேர்த்திருவிழா பொன்னாலை வரதராஜப்பெருமான் கோவிலில் ஒரு வருடத்தில் இருமுறை நிகழ்கின்றது. கிருஷ்ண பரமார்மா அவதரித்த ஆவணி மாதத்துக் கிருஷ்ணபட்ச அட்டமியும் ரோகினியும் சேரும் நாளாகிய கிருஷ்ண ஜெயந்தி தினமே ஆவணி மகோற்சவத் தேர்த்திருவிழா நாளாகும். தேர்த்திருவிழாவன்று யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஆலயத்தில் கூடுவார்கள். அன்றைய தினம் வசந்தமண்டபத்தில் நிகழும் பூஜையும் சுவாமி புறப்பட்டு உள்வீதி வலம்வருவதும் தேரில் உலாப்போதலும் தெய்வீகம் பொழியும் நிகழ்ச்சிகளாக அமையும். கோவிலின் பொலிவும் கலகலப்பும் இதுதான் வைகுண்ட உலகமோ என்று எண்ணச் செய்யும். கோபுர வாயிலிலிருந்து சுவாமி புறப்படும் நிகழ்வையும் சுவாமி தேரில் இருப்பதையும் தேரால் இறங்கி அசைந்து அசைந்து வருவதையும் கண்டு இரசிப்பவர்கள் பெரும் பாக்கியசாலிகள் என்றே சொல்ல வேண்டும். தேரிலே பெருமான் எழுந்தருளும் போது ஆகாயத்தில் நாராயணின் வாகனமாகிய கருடன் பல கருடன்களாக வந்து வட்டமிட்ட வண்ணம் தரிசனம் செய்வதை அடியார்கள் பார்த்து மெய்சிலிர்ப்பார்கள். பொன்னாலைப் பதியின் தோற்றம், மகிமை என்பன கூறும் தட்சண கைலாச புராணம் கிருஷ்ண பரமார்மா அவதரித்த ஆவணி கிருஷ்ணபட்ச அட்டமி விசேட தினமாகிய இரதோற்சவத் தினத்திலே பொன்னாலயத்திலே வாசகம் செய்யும் லோகரட்சகராகிய அச்சுதப் பெருமானை யாவன் ஒருவன் அன்புடன் தரிசனம் செய்வானாயின் அவனுடைய பாவங்கள் அழிந்து இப்பிறப்பிலே எல்லா நலன்களையும் அடைந்து மகிழ்ந்து மறுமையில் வைகுண்ட லோகத்தை அடைந்து கழிப்புற்று வாழ்வான் என்று கூறுகின்றது.

இப்புராணத்திலே பொன்னாலயத்தில் தரிசனம், வழிபாடு என்பன செய்வதற்கு உரியதாகச் சொன்ன தினத்தில் இவ்வுண்மையினை அறியாதவரும் தரிசனம் செய்து நலன்கள் அடையத்தக்கதாக அன்றைய தினம் தேர்த்திருவிழா அமைய மகோற்சவம் நடைபெற்றுவருவது வரதராஜப் பெருமானின் அருட்சிறப்பேயாகும். அதேபோலவே வைகுண்ட ஏகாதசி என அழைக்கப்படும் மார்கழி மாதத்து ஏகாதசி தினத்திலும் மார்கழி மகோற்சவத் தேர்த்திருவிழா நடைபெறும். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற ஆவணி மகோற்சவத் தேர்த்திருவிழாவானது இவ்வருடம் 13.09.2025 சனிக்கிழமை பக்திபூர்வமாக நிகழ்கின்றது. இதனை தரிசனம் செய்தும், இரசித்தும் இன்பமடைவதன் மூலம் நாம் பிறவிப் பயனைப் பெற்றவர்களாவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# சீனம் விடு தூது...!

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்புரிமை நீக்கச் சட்டத்தைத் தொடர்ந்து, ஸ்ரீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மிக நீண்டகாலமாக வசித்துவந்த கொழும்பு விஜயராம மாளிகையில் இருந்து வெளியேறி தனது சொந்த ஊரான தங்காலைக்குத் திரும்பியிருக்கின்றார். சிறப்புரிமை நீக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், மறுநாளே விஜயராமவில் இருந்து வெளியேறிவிடுவோம் என்று மஹிந்த தரப்பினர் பலமுறை கூறியிருக்கின்றனர். அவர்கள், தாங்கள் கூறியதற்கு அமையச் செயற்பட்டுள்ளனர். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், 'மாளிகை' ஒன்றில் இருந்து மஹிந்த வெளியேறி 'இன்னொரு மாளிகைக்கு' செல்வதை, ஏதோ மடத்துக்குச் செல்வதைப்போன்று அரங்கேற்றப்பட்ட நாடகத்தின் பிரதான கதாபாத்திரமாக மாறியிருக்கின்றார் இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங். விஜய ராமவில் இருந்து மஹிந்த வெளியேறிய தருணத்தில் அவரைச் சந்தித்து உரையாடி அனுப்பி வைத்திருக்கின்றார் அவர்.

உண்மையில், தார்மீக அடிப்படையில் மஹிந்த அந்த மாளிகையில் இருந்து என்றோ வெளியேறியிருக்கவேண்டும். மக்களின் பலகோடி ரூபா பெறுமதியான வரிப்பணத்தை அந்த மாளிகை உறிஞ்சித் தள்ளுகின்றது என்பதைப் புள்ளிவிவரங்கள் ரீதியாக வெளிப்படுத்திய பின்னரும், அவர் அங்கு அடாத்தாகத் தங்கியிருந்தார். தவிர்க்கமுடியாத தருணத்தால் அங்கிருந்து வெளியேறும்போதும்கூட பல்வேறு அரசியல்நகர்வுகளுக்கான அடித்தளத்தை பலமாகவே அமைத்துவிட்டே சென்றிருந்தார். இவ்வாறானதொரு இடத்தில் - அவ்வேளையில், ஒரு தூதுவரின் பிரசன்னம் அங்கு அவசியமற்றது. இலங்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட தூதுவர்கள் இருக்கின்றனர். அவர்கள் இந்த விடயத்தை அணுகிய விதத்துக்கும், சீனத் தூதுவர் அணுகிய விதத்துக்கும் இடையில் இமாலய வேறுபாடு காணப்படுகின்றது. சுருங்கச் சொல்லின், 'எரியும் நெருப்பில் எண் ணெயை ஊற்றியிருக்கின்றார்' தூதுவர் கீ சென்ஹொங்.

இப்போது மட்டுமல்ல, எப்போதும் சர்ச்சைக்குரிய நபராகவே சீனத்தூதுவர் கீ சென்ஹொங் இருந்து வந்திருக்கின்றார். சில மாதங்களுக்கு முன்னர், பருத்தித்துறை முனைவரை சென்ற அவர், அங்கு நின்றவாறு, 'இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம்?' என்று வினவியிருந்தார். மிகச் சாதாரண தேடலின்மூலம் அறியவேண்டிய அந்தத் தகவலை, ஊடகங்கள் முன்னிலையில் கேள்வியாகப் போட்டுடைத்து, இந்தியாவிடத்தில் பெரும் தர்ம சங்கடத்தை இலங்கைக்கு ஏற்படுத்தியிருந்தார். அத்துடன், தேர்தல் முடிவுகள் தொடர்பில் தங்களின் நிலைப்பாட்டைத் தூதுவர்கள் வெளிப்படுத்துவது அழகும் -ஆரோக்கியமும் அல்லாத விடயமாகக் கருதப்படும் நிலையில், கடந்த தேர்தல் முடிவுகள் தொடர்பிலும் சீனத் தூதுவர் கீ சென்ஹொங் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆக, ஒரு தூதுவர் எப்படியெல்லாம் இருக்கக்கூடாதோ அப்படியெல்லாம் அவர் இருந்துவருகின்றார்.

' அறிவுரு வாராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு'

என்றவாறாக ஒரு தூதுவர் செயற்படவேண்டும் என்கின்றார் பொய்யாமொழிப்புலவர் வள்ளுவர். இயல்பாகவே அமைந்த நுண்ணறிவு மற்றும் தோற்றக் கவர்ச்சியுடன், ஆராய்ந்து பெற்ற கல்வியறிவையும் கொண்டவன் மட்டுமே தூதுரைக்கத் தகுதியானவன் என்பது அதன் பொருள். அந்தத் தகுதி தன்னிடத்தில் கொஞ்சமேனும் உண்டா என்பதை சீனத்தூதுவர் ஒருமுறை ஆராய்வது அவசியம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

அறியாமையுடன் ஒருவன் நூறு ஆண்டு வாழ்வதை விட, அறிவுடன் ஒரு நாள் வாழும் வாழ்க்கையே மேலானது.

– பிரெய்ட்–




# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உணவுத்திட்டம்



## 1,500 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, செப்.13

**நாட்டில் உள்ள 1,60,200 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 5,000 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

இதற்காக அரசாங்கம் 1,500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டவரைவுமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்தத் திட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் நடைமுறைக்குவரும். நாட்டில் வாழ்கின்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கர்ப்ப காலத்தில் ஆறு மாதங்களுக்கும் அதன்பின்னர் பாலூட்டும் காலங்களில் நான்கு மாதங்களுக்குமாக 10 மாதங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. 2 இலட்சத்துக்கு 80 ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார்கள் நாட்டில் தற்போது உள்ள நிலையில் அவர்களில் மந்த போசனத்தோடு காணப்படும் தாய்மாரைத் தெரிவுசெய்து உணவுப்பொதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச-இ)

## தாயும் மகனும் வெட்டிக்கொலை

கொழும்பு, செப்.13
கரந்தெனிய பொலிஸ் பிரிவின் கொட்டவப் பகுதியில் தாயும் மகனும் நேற்று முன்தினம் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். சம்பவத்தில் 75 வயதுடைய பெண் ஒருவரும் 25 வயதுடைய ஆணுமே இவ்வாறு உயிரிழந்தவர்களாவார்கள். குறித்த இளைஞர் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் முச்சக்கரவண்டி ஓட்டுநர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கொலைக்கான காரணம் அல்லது கொலையை யார் செய்தார்கள் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## 15 பாதாளக்குழுவினர் வெளிநாடுகளில் கைது

கொழும்பு, செப்.13
சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட இலங்கையின் மேலும் 15 பாதாள உலக குழு உறுப்பினர்கள் வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
ரஷ்யா, ஓமான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியாவில் அவர்கள் கைதாகியுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.
இந்தப் பாதாள உலகக் குழு உறுப்பினர்களை அந்த நாடுகளின் சட்டநடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## பாம்பு கடத்தல்; பெண் கைது

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் ஆறு உயிருள்ள வெளிநாட்டுப் பாம்புகளை நாட்டுக்குக் கடத்த முயன்ற இலங்கைப் பெண் ஒருவர் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பல்லுயிர், கலாசார மற்றும் தேசிய பாரம்பரிய பாதுகாப்புப் பிரிவின் ஒத்துழைப்புடன் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# தேசியப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு!

கொழும்பு, செப்.13
2025ஆம் ஆண்டு கல்வி வருடத்தில் தேசிய பாடசாலைகளின் இடைநிலைத் தரங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
தரம் 2 முதல் தரம் 11 வரை மாணவர்களை அனுமதிப்பது (தரம் 5 மற்றும் 6 தவிர்த்து) தொடர்பில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து மேலதிக ஆவணங்கள் சகிதம் உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை- ஆவணி 24
14.09.2025
சுபநேரம் : 09.03 - 10.33
ராகுகாலம் : 04.33 - 06.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிக்குளம் மக்களை மீளக்குடியமர்த்துங்கள்

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து

**மன்னார்,செப்.13**

**முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமமக்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றில் இடம்பெற்ற தேசிய கணக்காய்வுச் சட்டத்திருத்தம் தொடர்பான விவாதத்தில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும்தெரிவிக்கையில், முள்ளிக்குளம் கிராமத்தில் வாழ்ந்த மக்கள், 1990ஆம் ஆண்டு நிலவிய அசாதரண நிலைமை காரணமாக தங்களுடைய பூர்வீக வாழ்விடத்தை விட்டு இடம் பெயர்ந்தனர். சுமார் 400 குடும்பங்கள் இடப்பெயர்வைச் சந்தித்தனர். 2002 ஆம் ஆண்டு அவர்களுடைய சொந்த இடமான முள்ளிக்குளத்தில் மீள்குடியேற றப்பட்டனர். மீள்குடியேறி 5 வருடங்களிலேயே, மீளவும் இடம்பெயரவேண்டிய அவலநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். மக்கள் தமது பூர்வீக வாழ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்து இரண்டு தசாப்த காலங்களை அண்மித்துள்ள நிலையில், இதுவரை அவர்களுடைய சொந்த இடத்தில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தக் கிராம மக்கள் அயற்கிராமங்களான மலைக்காடு மற்றும் காயாக்குழி உள்ளிட்ட கிராமங்களில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவருகின்றனர். இவ்வாறான நிலையில், கடற்படையினரும் வனவளத் திணைக்களத்தினரும் இணைந்து முள்ளிக்குளம் கிராமத்தை முற்றாக அபகரித்துள்ளனர். 2002ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின்போது அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட வீடுகளில் கடற்படையினரது குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மக்கள் எவரும் மீள்குடியமர்த்தப்படாத நிலையிலும், அங்கு பாடசாலை இயங்கிவருகின்றது. அங்குள்ள தேவாலயத்துக்கும் மக்கள் சென்று வருகின்றனர். தமது சொந்த இடத்துக்கு சுற்றுலாப் பயணிகளைப் போன்று சென்றுவருகின்றனர். எனவே முள்ளிக்குளம் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளவேண்டும்.- என்றார். (க-246)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப்.13

கிளீன் ஶ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டச் செயலகமும் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்கானைப் பிரதேச செயலகத்தில் காலை 8.30மணிக்கு தொடக்கம் மாலை 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் (தேசிய அடையாள அட்டை), ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயதுச் சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், மோட்டார் வாகனப் பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள், பிரதேசசபைகளால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள், திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழிற்கல்வி வழிகாட்டல்கள், சமூக சேவைகள் திணைக்களத் தினால் வழங்கப்படும் சேவைகள், முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள், மருத்துவ முகாம் பொது மருத்துவப் பரிசோதனை, கண்புரைப் பரிசோதனை இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் (வறியவர்களுக்கு) போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன. (ச-41-27)

## வடிகால் தூர்வாரும் பணி முன்னெடுப்பு!

யாழ்ப்பாணம்,செப்.13

பருத்தித்துறை நகரப் பகுதியில் காணப்படும் வடிகான்களைத் தூர்வாரும் பணிகள் இரண்டாம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது. பருவமழை அண்மித்துள்ளநிலையில் மழை வெள்ள நீர் தடையின்றி வடிந்தோடுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து நகரசபைத் தொழிலாளர்களினால் இந்தப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

பருத்தித்துறை நகரபிதா டக்ளஸ் போல் நேரடியாகப் பார்வையிட்டுத் தூர்வாரப்படும் சேற்று மண் உள்ளிட்ட கழிவுகளை உடனுக்குடன் அங்கிருந்து அகற்றுவதற்கான அறிவுறுத்தல்களை வழங்கினார். (ச-25,100)



## ஞாபகார்த்தக் கிண்ண உதைபந்துப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.13

வலிகாமம் லீக்கின் அனுசரணையுடன் அராலி ஜேம்ஸ் மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி கழகத் தலைவர் எஸ்.சசிதரன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கழகத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அராலி பாரதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ச-17)

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு

### அளவெட்டி அருணோதயா கல்லூரி

வி.தீஷன் 185, க. ஹரிக் ஷன் 166, சு.சானுஜா 165, பி. சுபிக் ஷா 159, ச. சானுஷன் 157, வெ. சந்துஷன் 153, சி. கம்ஷா 153, க. பருத்தியா 152, க.ஆராதனா 149, கோ. ஜோன்சிகா 148, ஜெ. கிரிஷானா 146, பி. வகீசன் 142, நி. அக் ஷயா 139 , ச. அபிஷயா 138 , ர.கம்ஷப்திந்தி 135, க. பகீர்னா 135, செ. ஐஷ்விகா 134

### யாழ். சண்டிலிப் பாய் இந்துக்கல்லூரி

ஆ.பேரெழில் 157, பு.லிக்சனா 134, ரா.தக்சின் 132, (63)

## யாழ்ப்பாணத்தில் தொழிற்சந்தை

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி தொழிற்சந்தை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதுதொடர்பாக மனிதளவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் தொழிற்சந்தை தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், ஒழுங்கமைப்புகள் மற்றும் தொழிலற்றோருக்கான அறிவித்தல்களும், அவர்களைத் தொழிற்சந்தைக்கு அழைத்துவருவதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் உத்தியோகத்தர்களுக்கு யாழ்.மாவட்டச் செயலரால் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (ச-66)

## பன்முகப் பேராளுமைகள் விருது வழங்கி மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், செப்.13

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 30 மூத்த, இளைய பன்முகப் பேராளுமைகள் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவைத் தளமாகக்கொண்டியங்கும் 'முயற்சியே உன் வளர்ச்சி, கல்விக்கும் வாழ்வுக்கும் கரம் கொடுப்போம்'

எனும் தொனிப்பொருளில் இயங்கும் அறிவியல் மாற்றம் சமூக மேம்பாட்டு நிறுவனம் இந்த கௌரவத்தை வழங்கியது.

இந்த நிகழ்வு அதன் நிறுவுநர், தலைமை ஒருங்கிணைப்பாளர் திருக்கேதீஸ்வரன் குருசாமி (BABBA கலிபோர்னியா பல்கலைக்கழகம் அமெரிக்கா) தலைமையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வவுனியா மாநகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பெரியதம்பி செல்லக்குட்டி - முல்லைத்தீவு மா.இரத்தினசோதி- யாழ்ப்பாணம், ஜெகதீஷ்வரி நாதன்- அம்பாறை காளிக்குட்டி சந்திரலிங்கம்- அம்பாறை, உடுவிலூர் கலா - யாழ்ப்பாணம்,தர்சிகா குலதாசன்- யாழ்ப்பாணம், இராமநாதன் கோகுலன் - முல்லைத்தீவு., நளினி இரத்னராஜா - மட்டக்களப்பு, வல்லிபுரம் ஏழுமலைப்பிள்ளை- யாழ்ப்பாணம், வாசுகிவாசு - கொழும்பு, திருமலைச்சந்திரன் - திருகோணமலை, கனேசசுந்தரன் சிறீகுகன் - யாழ்ப்பாணம், இ.சிவரமணி- திருகோணமலை, த.சுசேந்தன் - மட்டக்களப்பு, சங்கரி சிவகணேசன் - யாழ்ப்பாணம், ஜெ.தஸ்விகா - யாழ்ப்பாணம், சி.விமல்ராஜ் - யாழ்ப்பாணம், தம்பிராசா பூபாலசிங்கம் - மட்டக்களப்பு, சு.ஜெயராசசிங்கம் - முல்லைத்தீவு, டானியல் அமல்ராஜ் - யாழ்ப்பாணம், ஜெராட் நோயல் - யாழ்ப்பாணம், ந.பரமேஸ்வரன்-யாழ்ப்பாணம், செ.சாந்தகுமார் - கிளிநொச்சி, கயல்விழி கொலின் பாஸ்கரன் - மன்னார், ம.திருச்செல்வம் - திருகோணமலை, கார்த்திகேசு- அம்பாறை, சகதீசன் - யாழ்ப்பாணம், உ.கிரிஜன் - யாழ்ப்பாணம், தவபாலன் - வவுனியா, அ.ரகிநாத் - முல்லைத்தீவு ஆகிய ஆளுமைகளே விருதுகளைப் பெற்றனர். (ச-[illegible])





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

- மேசன் (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3500.00
- மேசன் உதவியாளர் - Rs 2800.00
- வயறிங் பிளமிங் (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3500.00
- தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3500.00
- பெயின்ரர் (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3000.00
- சாரதி - ஆட்டோ (லைற் வெய்க்கில் (light Vechile)) - Rs 3000.00

தினசரி சம்பளம் வழங்கப்படும்.
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)

தொடர்பு: 077 2100 749
(காலை 8.00 - மாலை 5.30வரை) யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கும், மானிப்பாய் பிரதான வீதிக்கும், மிக அண்மையில் அமைந்துள்ள 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
காணி வாங்க விரும்புவோர் மட்டும் நேரடித் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 726 0194


# கோபா குழுத் தலைவராக கபீர் ஹாசிம் நியமனம்

கொழும்பு, செப்.13

பத்தாவதுநாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவுசெய்யப்பட்டார்.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராகப் பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் 2025. 08.06ஆம் திகதி அப்பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றது.

(ச-இ)


## பெயர் மாற்றம்

கரம்பன் தெற்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த டேவிட் மகேந்திரன் ஆகிய நான் எனது பெயரை மகேந்திரன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் மகேந்திரன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

மகேந்திரன்

## யாழ் செந்தமிழன் ஸ்ரூடியோ

(எங்கும் இல்லாத விலைக்கழிவுடன்)

★ 65,000 முதல் பிறந்தநாள் நிகழ்வு
(Video + Album + Frame)

★ 85,000 முதல் நீராட்டுவிழா நிகழ்வு
(Video + Album + Frame)

★ 100,000 முதல் திருமண நிகழ்வு
(Video + Album + Frame)

அனைத்து நிகழ்வுகளையும் 1 மாதத்திற்குள் உங்கள் கைகளில் பெற்றுக்கொள்ளலாம்

★ நேரடி ஒளிபரப்பு

மேலதிக தொடர்புகளுக்கு
077 6405572 / 076 2345956


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 03.10.1954
இறப்பு 13.08.2025

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 13.08.2025 அன்று சிவபதமடைந்தஎமது குடும்பத் தலைவர்

**அமரர் செல்லத்துரை செல்வராசா (நாதன்)**


அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை வளர்மதி முன்னேற்றக்கழக மண்டபத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
15 . 02 . 1939



ஆண்டவன் அடியில்
26 . 08 . 2024

**அமரர் சிதம்பரப்பிள்ளை அருணாசலம்**

ஓராண்டு கடந்தாலும் உங்கள்
முகம் பார்த்த கண்கள்
குரல் கேட்ட செவிகள்
கைபிடித்து மெய்சிலிர்த்த நிமிடங்கள்
நம்முள் உங்கள் நினைவுகளாய்
நாம் பேசும் வார்த்தைகளிலும்
நாம் நடக்கும் பாதையிலும்
எம் உள்ளத்து உணர்வுகளிலும்
என்றென்றும் நற்றுணையாய் நீங்கள்
நாளும் நினைவுகளாய் வாழ்வீர்கள்

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

கடந்த 26.08.2024 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் சிதம்பரப்பிள்ளை அருணாசலம் அவர்களது முதலாம் வருட சிரார்த்த நிகழ்வு புரட்டாதி மாத அபரபக்க சப்தமி திதியில் இன்று 13.09.2025 எமது இல்லத்தில் நடைபெறும்.

முத்தகம்
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்

தகவல்
குடும்பத்தினர்

(CS 59387) E

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 09 . 1969



உதிர்வு
18 . 08 . 2022

**அமரர் சின்னையா பாலச்சந்திரன்**

பாசத்தின் பெருவிளக்கே அப்பா நீங்கள் பட்ட துன்பங்கள்
வர்ணிக்க வார்த்தையில்லை

உங்களுக்காக நீங்கள் எப்போதும் வாழ்வை
பயணித்து வாழ்ந்ததை நாம் அறியோம்

ஓய்வு என்று நீங்கள் வீட்டில் இருந்த நாட்கள் எப்போதும்
நாங்கள் அறிந்ததில்லை அப்பா

ஒவ்வொருவருக்கும் உங்கள் சக்தியை மீறி
வழிகாட்டினீர்கள் அப்பா

ஊரறியா உண்மைகள் அனைத்தும் இங்கே
ஊமையாய் உறங்கி கிடக்கின்றன அப்பா

இனி நீ யார் என்று மற்றவர் ஒன்றுசேர்ந்து தூற்றி நிற்க
அட இது தான் உனக்கு கிடைத்த பரிசா என்று ஊரே வியந்து நிற்க

இருப்பினும் காலம் பதில் சொல்லும் என்று
உங்கள் ஆத்மா ஓங்கி ஒலிக்க

அத் தொனியில் நாம் அமைதி கொண்டோம் அப்பா

அணையா பெருவிளக்காய் நித்திய
வாழ்வு கொள்ளுங்கள் அப்பா

விழி நீருடன் நீங்கள் நேசிக்கும் நாம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

அல்லாரை தெற்கு
மீசாலை

குடும்பத்தினர்

(CS 59375) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி; களஆய்வுப் பணிகளில் இந்தியக் குழு

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணம் பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பில் இந்தியக் குழுவினர் நேரில் ஆய்வுப் பணிகளை முன்னெடுத்துள்ளனர் என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவும் ஆழப்படுத்தவும் இந்தியா திட்டமிட்டுள்ளது. இது தொடர்பான பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ள நிலையிலேயே, இது தொடர்பான பணிகளுக்காக இந்தியக் குழுவொன்று இலங்கைக்கு வருகைதந்து ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழுவினர் கடந்த 9 மற்றும் 10ஆம் திகதி களில் கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுடன் இணைந்து, சம்பவ இடத்துக்குக் களப் பயணத்தையும் மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

**வாகனம் விற்பனைக்கு**

TATA 207 (Power Steering) வாகனம் விற்பனைக்கு உண்டு.
விலை - 1300,000/=
077 758 0001, 076 983 6666

# ‘இவர்கள் மகாத்மாக்கள்’ நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், செப்.13

மூத்த சுயாதீன ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா எழுதிய ‘இவர்கள் மகாத்மாக்கள்’ நூலின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா வாழ்த்துரை ஆற்றுவார். டில்லி பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவன் ஐ.வி.மகாசேனனின் அறிமுக உரையைத் தொடர்ந்து கலாபூஷணம் பண்டிதை.திருமதி.வைகுந்தம் கணேசபிள்ளைக்குச் சிறப்புப் பிரதி வழங்கி வைக்கப்படும். உளவளத் துணையாளர் நா.நவராஜ் நூல் தொடர்பான கருத்துரைகளை நிகழ்த்துவார். தொடர்ந்து நூலாசிரியர் ஏற்புரை வழங்குவார். உளவள மருத்துவ சேவையாளர் ந.ஞானசூரியர் நிகழ்வை முன்னிலைப் படுத்துவார். (ச-66)

**வீடு வாடகைக்கு தேவை**

நான்கு பேர் கொண்ட குடும்பம் (அரச உத்தியோகத்தர்) ஒன்றிற்கு யாழ் நகரிலிருந்து 3 Km தூரத்திற்குள் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:
077 515 2015

**WIN REPAIRE**

குளிர் சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், A/C கள் பழுதடைந்து விட்டதா உங்களிடத்திற்கே வந்து திருத்தித் தருகின்றோம்.
தொடர்பு: 076 834 6136

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 01 . 03 . 1999



ஆண்டவன் அடியில் 13 . 09 . 2021

**அமரர் சிறீவாணன் டினோசிகா**





ஆண்டு நான்கு கடந்ததம்மா
நீர் மறைந்த நாளிலிருந்து
நான்கு அல்ல நான்காயிரம் கடந்தாலும்
மாறுமோ ஆறுமோ எம் நெஞ்சம்
பார்க்குமிடமெல்லாம் பாவை
உம் தோற்றங்கள்
காற்றிலெல்லாம் உம் வாசனை
காதிலெல்லாம் உம் தேன்குரல்
ஆறவும் தேறவும் வழியின்றி
அழுது புலம்புகின்றோம்.
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (CS/59384) J-1 குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 07.01.1939

இறப்பு 10.09.2025

## சிதம்பரம் நல்லநாதன் (ராசாத்தி)

நல்லூர் இராஜவீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ராசாத்தி என அன்பாக அழைக்கப்படும் சிதம்பரம் நல்லநாதன் (2025.09.10) ஆம் திகதி புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவகாமி அவர்களின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான துரை - செல்லம்மா அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகராசா, பூரணம், தங்கச்சி அம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மற்றும் சூரியகுமாரன், சூரியகுமாரி, கமலகுமாரி, சிவகுமாரன், ஜெயகுமாரன், சந்திரகுமாரன் மற்றும் காலஞ்சென்ற இந்திரகுமாரன், கிருஷ்ணகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தேன்மதி, தேவதாஸ், உதயகுமார், வதனா, ராசலஷ்மி, வரனிதி, கிளி ஆகியோரின் பாசமிகு மாமியும், அயனி, நிரோஸ், தர்ஷன், ரஜீவன் சர்மிளா, ஜவாகர் கார்த்திகா, இலக்கியா, துளசி, வெண்ணிலா, ஆதவன், அஸ்மி, அனோஜன், ஜகிசன், ஜனுஸ், யஸ்னா, மிதுன், நபியா ஆகியோரின் பேத்தியும் ரக்சனா, சசீனா, ரசீனா, அஜய், மியா, மாயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (2025.09.14) ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அவரது பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
077 600 1793

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமலின் திருமண மின்செலவு மனுவை விசாரிக்க அனுமதி!

கொழும்பு, செப்.13

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் திருமணத்தில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்துக்கான கட்டணத்தை இலங்கை மின்சாரசபைக்கு சரியான நேரத்தில் செலுத்தத் தவறியதன்மூலம், இந்த நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட தாகக் கோரித் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதியளித்தது.

இந்த மனுவைச் சட்டத்தரணி விஜித குமார தாக்கல் செய்துள்ளதுடன், அதில் பிரதிவாதிகளாக இலங்கை மின்சாரசபை உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர்.

நாமல் ராஜபக்சவின் திருமணத்தில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்துக்கு இலங்கை மின்சாரசபைக்கு 2 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் செலுத்த வேண்டியிருந்தநிலையில் மின் கட்டணம் செலுத்தப்படவில்லை. பின்னர் இந்த வழக்கைத் தாக்கல் செய்த பின்னரே குறித்த மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டதாகவும் அவர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களின் சிறிய மின்சாரக்கட்டணம்கூட சரியான நேரத்தில் செலுத்தப்படவில்லை என்று கூறி, இலங்கை மின்சாரசபை மின்சாரத்தைத் துண்டிக்கின்றது. இவ்வளவு பெரிய மின்சாரக் கட்டணத்தை சரியான நேரத்தில் வசூலிக்க நடவடிக்கை எடுக்காதது கடுமையான தவறு என்றும் சுட்டிக்காட்டிய மனுதாரர் கூறியுள்ளார். (ச-இ)

## நிர்வாகக் கூட்டம்!

யாழ்ப்பாணம், செப்.13

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய நிர்வாக சபைக் கூட்டம் வரும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணியளவில் ஆலயவாசலில் நடைபெறவுள்ளது. அனைத்து நிர்வாக உறுப்பினர்களும் தவறாது பங்கு பற்றுமாறு ஆலய நிர்வாகத்தினரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-100)

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து வயோதிபப் பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 13

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

ராமமூர்த்தி சீதாலட்சுமி (வயது-64) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (ம-26)

## கலந்துரையாடல்

*யாழ்ப்பாணம், செப். 13*

*இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பான கலந்துரையாடலொன்று கீரிமலை நகுலேஸ்வர வீதியில் அமைந்துள்ள கருகம்பனை கலாச்சார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.*

*கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், உறுப்பினர்கள், மற்றும் தமிழ்த்தேசியப் பற்றாளர்கள் அனைவரையும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வெளிப்படுத்துமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (ம-25-66)*


## Construction Guarantee Fund
**EMPLOYMENT**

Construction Guarantee Fund (CGF) is a Government non-profit Financial Service Organization committed to uplift the Local Construction Industry.

CGF seeks the following personnel in different specialties & capacities to join the Team CGF to further improve the overall system.

1. Assistant Monitoring Officers - **Western and Northern Provinces**.
2. Technical Officers-Project Evaluation – **Northern, Eastern & other provinces**
3. Quantity Surveyors
4. Secretary with sound in 03 Languages and ability in shorthand will be an added qualification.

All candidates should have Minimum NVQ level 05 (except for item no 04) and should have academic qualifications and experience with Contract - Conditions, Project Implementation, RISK Identification, Monitoring and Training.

Only shortlisted will be called to the interview. CGF decision will be the final.

Selected candidates will be initially on assignment basis and depend on the performance may consider for permanency at a later stage.

Please forward your CV with two non-related referees initially by Email **admin@cgf.gov.lk** followed with registered post to the **Manager-Administration, Construction Guarantee Fund (CGF),"Savsiripaya", 123, Wijerama Mawatha, Colombo 07** before 30th September 2025.


# குற்றங்களுடன் தொடர்புடையோர் தப்பியோடுவதற்கு இடமளியோம்!

*பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு*

**கொழும்பு, செப்.13**

**ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள உலகக்குழுக்களுக்கும் கடந்தகால அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அரசியல்வாதிகளுக்கும் இடையே தொடர்புள்ளமை குற்றப்புலனாய்வுப் பிரிவின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதுதொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் சபை ஒத்திவைப்புவேளையில் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய கம்பஹாப் பிரதேசத்தில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் மல்லாவி, பாலைநகர்ப் பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். விசாரணைகள் தீவிரமாக நடைபெறுகின்றன. பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய எவரும் தப்பிச் செல்ல இடமளிக்கப்படமாட்டாது- என்றார். (எ-இ)

### வரதராஜ...

வுள்ளது. இதன்படி, இன்று காலை 9.30 மணிக்கு வசந்தமண்டபபூசையும், மு.ப. 11.30 மணிக்கு தேர்ப்பவனியும் இடம்பெறவுள்ளன. கிருஸ்ணஜெயந்தி உற்சவம் இரவு 10.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இரவு 12 மணிக்கு கிருஸ்ணஜெயந்தி, தலாட்டு என்பன இடம்பெறவுள்ளன. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருவடிநிலை தீர்த்தக் கரையில் சமுத்திர தீர்த்தம் இடம்பெறும் என பரிபாலனசபை அறிவித்துள்ளது.

(அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகள்...

நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
சந்தேகநபர்களிடம் இருந்து 91 பறவைகள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட பறவைகளில் 72 புறாக்கள் என்றும், 19 சண்டைக் கோழிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் சிறுவன். அவர் 17 வயதுடையவர். மற்றையவர் 57 வயதுடையவர். சந்தேகநபர்களுக்கு எதிரான மேலதிக சட்ட நடவடிக்கைகளை பேசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-213)

## பட்ஜெட்...

டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிவரை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான கூட்டம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று இடம்பெற்றது.
இதன்போதே, 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் உரை நவம்பர் மாதம் 7ஆம் திகதி இடம்பெறும் என்றும், நவம்பர் மாதம் 8ஆம் திகதிமுதல் விவாதங்களை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, நவம்பர் மாதம் 8ஆம் திகதி முதல் நவம்பர் 14ஆம் திகதி வரை 6 நாள்கள் இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடைபெறவுள்ளது. நவம்பர் மாதம் 14ஆம் திகதி மாலை 6 மணிக்கு இரண்டாவது மதிப்பீடு தொடர்பான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.
இதன் பின்னர் நவம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி வரையிலான 17 நாள்கள் (விடுமுறை நீங்கலாக) குழுநிலை விவாதத்தை நடத்துவதற்கும், டிசம்பர் 5ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு மூன்றாவது மதிப்பீடுக்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் அரசாங்க விடுமுறைகள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர சனிக்கிழமை உள்ளிட்ட ஏனைய அனைத்து நாள்களிலும் வரவுசெலவுத்திட்ட விவாதம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## கைதுகளில்...

னர். நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேமசிங்க, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, டிரான் அலஸ், விமல் வீரவன்ஸ, சானக வகும்பர, பிரேம்நாத் சி தொலவத்தே, நிமல் பியதிஸ்ஸ ஆகியோரைக் கொண்ட குழுவினரே, அரசாங்கத்தின் கைது நடவடிக்கைகளில் இருந்து தம்மைப் பாதுகாக்குமாறு மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தி எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யவும், சிறைப்படுத்தவும் அரசாங்கம் முயற்சிக்கிறது என்று அவர்கள் மகாநாயக்க தேரர்களிடம் கூறியுள்ளனர்.
எதிர்க்கட்சிகளின் பேச்சுரிமையை முடக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. எனவே இந்த விடயத்தில் மகாநாயக்க தேரர்கள் மௌனமாக இருக்காது உடனடியாகத் தலையீடு செய்ய வேண்டும் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மகாநாயக்க தேரர்களிடம் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (அ-ம)

## போதை...

டன் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதைத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## மோட்டார்...


தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னைநீராவியடி பகுதியைச் சேர்ந்த மோகனபவன் வனிதா (வயது-40) என்ற குடும்பப்பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் தெரியவருதாவது:-
குறித்த பெண் கடந்த 9ஆம் திகதி மருத்துவமனைக்குச் செல்வதற்காக உறவினர்களுடன் மோட்டார்சைக்கிளில் பயணித்துள்ளார். இதன்போது திடீர் சுகவீனம் காரணமாக மோட்டார்சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்துள்ளார். அவர் உடனடியாக மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## எமக்கு...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை நிறைவடையும் வரை பதவி விலகுமாறு பிரதி பாதுகாப்பு அமைச்சரிடம் வலியுறுத்தினோம். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்றபோது, அவரே கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்தார். எனினும், அவர் பதவி விலகவில்லை. அரசும் அவரை பதவிநீக்கவில்லை. அதனால்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.
இந்த பிரேரணையை சபாநாயகர் நிராகரித்துள்ளார். சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட சட்ட ஆலோசனைக்கு அமையவே சபாநாயகர் எமது பிரேரணையை நிராகரித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. அவ்வாறெனில், அந்தச் சட்ட ஆலோசனையை சபையில் முன்வைக்குமாறு நாம் சபாநாயகரிடம் வலியுறுத்துகின்றோம். அதற்கும் அவர் சம்மதிக்கவில்லை.
குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்க முடியும் என சட்டமா அதிபர் கூறினார் என எமக்கு தகவல் கிடைத்தது. அதனை உறுதிப்படுத்தவே ஆவணத்தைக் கோரினோம். எனினும், அது வழங்கப்படவில்லை. பிரதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரமுடியும். ஆனால், சபாநாயகர் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார். இது பாதூரமான தவறாகும். சபாநாயகர் மீதான நம்பிக்கை குறைவடைந்து வருகின்றது. எனவே, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும். இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்துரையாடல் நடத்தி வருகின்றனர் - என்றார். (அ-ம-44)

## மரண அறிவித்தல்

பிறப்பு 28.09.1944 — இறப்பு 12.09.2025



**சின்னத்தம்பி S.P.சுந்தரலிங்கம்**

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.15. சந்தன மாதா கோவில் ஒழுங்கை. பாண்டியன்தாழ்வு. சுண்டுக்குளி. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (12.09.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னாச்சி தம்பதியரின் ஆசை மகனும். காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை வடிவேற்கரசு (ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர் - றெஜிமென்ட் சார்ஜன் மேஜர்) பொன்றோஸ் தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற சதாலட்சுமியின் பாசமிகு கணவரும். காலஞ்சென்ற மயூரன் மற்றும் கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்றவர்களான மல்லிகேஸ்வரி. இலங்கைநாதன். இராசலிங்கம். வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்றவர்களான கந்தையா. கனகலெட்சுமி. பூமணி. சின்னத்துரை. மங்கையற்கரசி. விஜயலெட்சுமி. வேலாயுதபிள்ளை மற்றும் சந்திரலேகா. விக்கினேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும். காலஞ்சென்ற சகாயலெட்சுமி மற்றும் நீற்றா. சுவிற்றி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு அத்தானும். நிஷாந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கோட்டக்கல்வி அலுவலகம். முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். யஸ்வினி. நேத்ரன் ஆகியோரின் ஆசை அப்பப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சந்தன மாதா கோவில் ஒழுங்கை,
இல.15, பாண்டியன்தாழ்வு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன் - 077 651 7878

40021 A

## மரண அறிவித்தல்

தோற்றம் 28.04.1958 — மறைவு 12.09.2025



**தம்பிப்பிள்ளை நாகேஸ்வரன் (கவிஞர்)**

சாவகச்சேரி, பெரியமரவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நாகேஸ்வரன் நேற்று (12.09.2025) வெள்ளிக்கிழமை சிவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் யோகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், கலைவாணியின் அன்புக் கணவரும், நிரோஜினியின் அன்புத் தந்தையும், வதனராஜா (தீபன்) அவர்களின் அன்பு மாமனாரும், சாம்பவி, கவிசயன் ஆகியோரின் அன்புப் பேரனும், கைலாயப்பிள்ளை சரவணமுத்து அவர்களின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

CR 40041 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயக...

முன்னேற்றம் கண்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் செயன்முறைகள், சிவில் உரிமைகள், அரசியற் பங்கேற்பு, சிவில் குழுக்களுடனான அரசாங்கத்தின் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கருத்திற் கொண்டு, சர்வதேச நாடுகளுக்கு இடையிலான ஜனநாயக நிலைத் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தத் தரப்படுத்தலிலேயே இலங்கை கணிசமான அளவுக்கு முன்னேறியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் நிர்வாகத் திறன், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள், ஆகியனவே இலங்கை தொடர்பான ஜனநாயக மதிப்பீடு அதிகரிக்கக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நீண்டகாலமாக நடத்தப்படாமல் இருந்த உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டமையும் இலங்கையின் மதிப்பேற்றத்துக்குக் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஒரு நாடு சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதற்கு, அந்த நாடு தொடர்பான சர்வதேச ஜனநாயக மதிப்பீடு பிரதானமாகக் கருத்திற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## கற்கோவளம்...

இதையடுத்து, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அனைவரையும் உடனடியாகக் கைது செய்யுமாறு வலியுறுத்தி, பாதிக்கப்பட்ட மீனவர்களும் பிரதேச மக்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கற்கோவளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சிவகுரு இராமஜெயம் தெரிவித்ததாவது:-

கற்கோவளம் சந்தைக்கு அண்மித்த பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது. இவ்வாறு மணல் அகழப்படும் இடங்களில் ஏற்படும் பாரிய குழிகளில் மழை நீர் தேங்குவதன் ஊடாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். கடந்த மாரி காலத்தின்போது, சட்டவிரோதமாக மணல் அகழப்பட்ட குழியில் விழுந்து ஒருவர் உயிரிழந்திருந்தார். எனவே, மணல் கடத்தல்களில் ஈடுபடுவோரின் வீடுகளுக்கு நேரில் சென்று, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம்என்று கோரிக்கை விடுத்திருந்தோம். இவ்வாறான பின்னணியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் மிகுந்த வேதனையளிப்பதுடன், இந்த விடயத்தில் நீதி நிலை நாட்டப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும்வரை நாங்கள் கடற்றொழிலில் ஈடுபடப்போவதில்லை.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், எமது பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் - என்றார்.

இதேவேளை சம்பவ இடத்துக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ந.திரிலிங்கநாதன் சென்று பார்வையிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## இலங்கையின்...

நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாகரன் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதியன்று காரைநகர் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் நால்வர் படகுடன் தத்தளித்துக் கொண்டிருந்துள்ளனர். இதையடுத்து அவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு, கரைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

முதற்கட்ட விசாரணையின்போது, தாங்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுவதற்காக வரவில்லை என்றும், வழிகாட்டல் கருவி (ஜி.பி.எஸ்.) செயலிழந்ததால் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களின் படகுகளில், மீன்பிடி உபகரணங்கள் எவையும் இல்லாத காரணத்தால், அவர்களுக்கு எதிராகக் நீரியல்வளத் திணைக்களத்தால் வழக்குத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்த வழக்கு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, அவர்கள் ஆந்திர மாநில மீனவர்கள் என்பதும், தமிழகத்தில் படகொன்றைக் கொள்வனவு செய்துவிட்டு, கடல் வழியாகத் திரும்பும்போது வழிகாட்டல்கருவி செயலிழந்ததால் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்துவிட்டனர் என்பதும் தெரியவந்தது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது, இந்த விடயங்கள் அனைத்தும் நீதவானின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டன. இதையடுத்து, அந்த மீனவர்கள் நால்வரையும் விடுவித்த நீதவான், அவர்களை இந்திய எல்லையில் கொண்டுசென்று பாதுகாப்பாக விடுவிக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-26)

## ரணிலையும்...

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர், அவருக்குப் பிணை வழங்கப்பட்ட நிலையில், தற்போது ஓய்வில் இருந்து வருகின்றார்.

இவ்வாறான பின்னணியிலேயே ரணிலுக்கும் சீனத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சியான விசாரணைகள், கைது, விளக்கமறியல், மருத்துவமனை என அண்மைக்காலமாக ரணிலைச் சுற்றி மிகுந்த பரபரப்பான நிலையயே காணப்பட்டது. இந்தப் பதற்றங்களுக்குப் பின்னர், ரணிலைச் சந்தித்த முதலாவது சர்வதேச இராஜதந்திரியாக சீனத்தூதுவர் ஷென் ஹொங் பதிவாகியுள்ளார்.

முன்னதாக, மஹிந்த ராஜபக்ச அரசமாளிகையில் இருந்து வெளியேறும்போதும் சீனத் தூதுவர் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியிருந்தார்.

சீனத் தூதுவரின் அண்மைக்கால நகர்வுகள் அரசியற் களத்தில் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மானிப்பாயில் 10 பரப்பு காணி விற்பனைக்கு**

**நிலப்பரப்பு**

- ✱ மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 2 வது காணி.
- ✱ மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து 600m தூரத்தில் அமைந்துள்ளது.
- ✱ 20 அடி பாதையுடன்
- ✱ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✱ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✱ நன்னீர் ஊற்று சூழல்.
- ✱ ஒரு பரப்பின் விலை 55 லட்சம் ரூபாய்.

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்புகளுக்கு :-

ஜெயம் 077 814 7389
077 986 5457

**தென்னங்காணி விற்பனைக்கு**

எழுது மட்டுவாளில் 3 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
குருநகரில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 711 4361

**காணி விற்பனைக்கு**

மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்பு: 077 794 8012

**இடிபாட்டு கற்கள் தேவை**

கட்டட வேலைக்கு இரண்டு ரக்ரர் இடிபாட்டுக் கற்கள் தேவை. (கொங்கிறிற் கல்லின் அளவு அல்லது அதன் பாதி அளவை கொண்டிருத்தல் வேண்டும்.
இடம் - இணுவில்

(CS/59388) J-1

தொடர்பு:- 071 330 0008

**வேலையாட்கள் தேவை**

கொக்குவில், தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு பொதியிடல் பணிக்கு பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் - 35000/-

(CS/59391) J-1

தொடர்பு:- 077 787 0953

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில், ரெக்னிக்கல் கொலிச்சிற்கு முன்பாக 24 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.

- குடியிருப்பு சூழல்
- நல்ல நீர்க் கிணறு
- செம்மண் தறைக்காணி
- பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை

தொடர்புகளுக்கு:-

076 755 8606, 074 338 4481, 077 638 5683


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளுடன்....



தோற்றம்
06.01.1976

மறைவு
15.08.2025


## அமரர் Dr. வெங்கடாசலம் சுதர்சன்

**Consultant General and Laparoscopic Surgeon**

MBBS (Colombo), Master of Surgery (Colombo) MRCS (Eng), MRCSEd, FMIS (ind), FMAS (AMASI), FCCSL, FICS Dip in Laparoscopic Surgery (France), PG Certificate in Medical Education (Cordiff), Fellow Royal College of Surgeons Sri Lanka, Immediate Past President (Jaffna Medical Association)
President SLAMADS (Sri Lanka Association of Minimal Access and Digital Surgeons)

**'சுதர்சன்' எனப் பெயர் கொண்ட ஜோதி**

நீதிநெறியும் நேரிய அறிவும் நிபுணத்துவமும் கொண்டரிய
சோதியொன்று 'சுதர்சன்' என்று சுடர்ந்தது ஈழ வானத்தில்...
பாதிவழியில் பயணம் முடித்துப் பாவி காலன் அபகரிக்க
நாதியற்றுப் போயினதெங்கள் நாடும் நற்றமிழ் சமூகமுமே !



அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் மு.ப. 11.00 மணியளவில் அரசடி விநாயகர் மண்டபத்தில் (பொற்பதி வீதி, கோண்டாவில்) நடைபெறும். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில், யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org